## வங்கிகள் வழங்கும் சுட்டி அட்டைகள் (ஸ்மார்ட் கார்டு)

DBOD.No.FSC.BC.88/24.01.011A/2001-02 ஏப்ரல் 11, 2002

பிராந்திய கிராமப்புற வங்கிகளைத் தவிர
அட்டவணையிலுள்ள அனைத்து வணிக வங்கிகளுக்கும்

அன்புடையீர்,

### வங்கிகள் வழங்கும் சுட்டி அட்டைகள் (ஸ்மார்ட் கார்டு)

1999 நவம்பர் 12ம் தேதியிட்ட சுற்றறிக்கை DBOD.No.FSC.BC. 123/24.01.019/99-2000 (இணைப்பு I – எண் 3 – வாடிக்கையாளர் தகுதி), மற்றவைகளுக்கு இடையில், நல்ல நிதி நிலை உள்ள, குறைந்தது ஆறு மாத காலத்திற்காவது திருப்திகரமான கணக்கு வைத்துள்ள வாடிகையாளர்களுக்கு சுட்டி/பற்று (SMART/DEBIT) சட்டைகள் வழங்குவது பற்றி அறிவுறுத்தப்பட்டிருக்கிறது.

2. இந்த அறிவுறைகளை மறு பரிசீலனை செய்ததில், நல்ல நிதி நிலை உள்ள வாடிக்கையாளர்கள் ஆறு மாத காலக் கணக்காவது வைத்திருக்க வேண்டும் என்ற விதியைத் தளர்த்தி, அதற்கும் குறைவாக ஆனால் நல்ல நிலை க்ணக்குள்ள வாடிக்கையாளர்களுக்கும் சுட்டி அட்டைகளை (கணினி வழி அல்லது கணினி வழி அல்லாதது) வங்கிகள் வழங்கலாம் என்று தீர்மானிக்கப்படுகிறது. ஆனால், 1999 ஜூன் 21ஆம் தேதியிட்ட DBS.FGV.BC.56/23.04.001/98-99இல் கூறப்பட்டுள்ள வங்கிப் பெருந்தொகை மோசடிகள் பற்றிய பகுத்தாய்வுக் குழுகுவின் அறிக்கையின் பாரா 9.2இல் சொல்லியுள்ள “உங்கள் வாடிகையாளரைத் தெரிந்து கொள்ளுங்கள்” வழிகாட்டுதல்கள் அந்த வங்கி அமல் படுத்தியிருக்க வேண்டும். கணினி வழி அல்லாத பற்று அட்டைகளை வழங்கும் வங்கிகள், ஆறுமாத கால திருப்திகரமான கணக்கு என்பதைக் கடைப்பிடிக்க வேண்டும்.

3. அறிவுரைகளின் தொகுப்பு நூல் பாகம் I பகுதி II (2000 ஜூன் 30 முடிய திருத்தம் செய்யப்பட்டது) இன் இணைப்பு I பகுதி 3 இல், இணைக்கப்பட்டிருக்கும் சிறு துண்டில் கூறப்பட்டுள்ள திருத்தத்தைச் சேர்த்துக் கொள்ளவும்.

4 கிடைத்தமைக்குப் ஒப்புதல் அனுப்புக.

அன்புடன்

C.R. முரளிதரன்
தலைமைப் பொது மேலாளர்

**சிறு துண்டு**
**அறிவுறைகளின் தொகுப்பு நூல்**
**DBOD, DBS AND IECD.FSC.BC 88 OF 02**

**இணைப்பு I (பாரா 15.11)**

**3. <u>வாடிக்கையாளரின் தகுதி</u>:**

1999 ஜூன் 21ஆம் தேதியிட்ட DBS.BC.56/23.04.001/98-99 இல் கூறப்பட்டுள்ள வங்கிப் பெருந்தொகை மோசடிகள் பற்றிய பகுத்தாய்வுக் குழுவின் அறிக்கை பாரா 9.2 இல் சொல்லப்பட்டுள்ள "உங்கள் வாடிக்கையாளரைத் தெரிந்து கொள்ளுங்கள்" வழிகாட்டுதல்களை வங்கிகள் நடைமுறைப்படுத்தி எந்த வாடிக்கையாளருக்கு அவை பொருந்துதிறதோ அப்படிப்பட்டவர் ஆறு மாதத்துக்குக் குறைவாகவே கிளையில் கணக்கு வைத்துக் கொண்டிருந்தாலும், அது நல்ல முறையில் திருப்திகரமாக இல்லாவிடின், வங்கிகள் அப்படிப்பட்ட வாடிக்கையாளர்களுக்கு கட்டி (ஸ்மார்ட்) அட்டைகள்/கணினி வழி பற்று அட்டைகள் வழங்கலாம். ஆனால் கணினி வழி அல்லாத பற்று அட்டைகளை வழங்கும் வங்கிகள் ஆறு மாத திருப்திகரமான கணக்கு வைத்திருப்பவர்களுக்கு மட்டுமே வழங்க வேண்டும். சேமிப்பு/நடப்பு கணக்குகள் வைத்திருப்பவர்கள், மற்றும் உடனடிப் பணமாக மாற்றும் வசதிகொண்ட வைப்புகள் வைத்திருப்பவர்கள் ஆகியோரும் சுட்டி/பற்று அட்டைகளைப் பெற்றுக் கொள்ளலாம். கடன் கணக்கு வைத்திருப்பவர்களுக்கு இத்தகைய அட்டைகளை வழங்கக் கூடாது. தனி நபர் கடன் கணக்கு வைத்திருப்போர் காசோலை வழியாக மட்டுமே தங்கள் கணக்குகளை இயக்குவார்களேயானால் கணினி வழி பற்று அட்டைகளை வங்கிகள் வழங்கலாம்.